# எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை

ந. முரளிதரன்



# எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை

ந..முரளிதரன்

நாளை பதிப்பகம்

கனடா

எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை
(கவிதைத் தொகுப்பு)

Entha Nadum Enakkuch Sonthamillai
(Poems )

ந.முரளிதரன்

Copyright @ 2020 Nadarajah Muralidaran
nmuralitharann@gmail.com

All rights reserved

முதல் பதிப்பு 2020

First Edition 2020

Book design: The Content Factory
(contentfactory@gmail.com)

Cover design: Sivabharathi

Published by:
Naalai Publishers
36 Salamander Street
Scarborough, ON
M1X 1Y9
Canada
www.naalai.com

விலை ரூ.100

Price : Rs.100

**சமர்ப்பணம்**

தங்களைத் தியாகம் செய்துகொண்ட
ஊர் நண்பர்களான
நிமலேந்திரன், லிங்கம், கோபி, உக்கு, பகி
ஆகியோருக்கு

# உள்ளே..

| | |
|---|---|
| அணிந்துரை | 7 |
| என்னுரை | 12 |
| கதை சொல்லுகிறான் | 15 |
| நான் பசியாயிருக்கிறேன் | 17 |
| தெளிவுரை | 19 |
| அறுபடாத நூலிழை | 22 |
| இரகசியம் | 24 |
| எனது அடையாளப் பொறிப்பு | 26 |
| சூரியனின் வரவு | 28 |
| அந்த மலர்கள் | 30 |
| அந்த இரவு | 32 |
| தேடும் என் தோழா | 33 |
| என்னவர்களை நோக்கியே... | 35 |
| திமிரெடுத்து நிற்கின்றன | 37 |
| எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை | 39 |
| அரசியல் விலங்கு | 41 |
| மீண்டும் போருக்கான அறைகூவல் | 43 |
| இன்னுமொரு வேளை எழுதுவேன் | 44 |
| உயிர்த்தெழுந்து பார் | 46 |
| காத்திருக்கிறேன்..! | 47 |
| எனது மண்ணும் எனது வீடும் | 49 |
| கடன் | 51 |
| ஏன் இந்தப் பின்னடைவு? | 53 |

ஏதோவெல்லாம் நடக்குமா? 55
எப்படி முடிகிறது? 56
அம்மணமானேன் 57
அழித்திட வேண்டாம் 59
தூரப் போய்விட்டார்கள் 61
சாரதியென... 63
ஆனந்தக் கூத்தாடுவீர்கள் 64
முற்றுப் பெறாதவையாய் 66
தூங்கும் தாயே நீ நன்றாக உறங்கு 68
களைந்தாக வேண்டியுள்ளது 70
எதனையும் இழந்துவிடுவதில்லை 71
சான்றோன் எனக் கேட்ட.. 72
செயற்பாடுகள் 75
எங்கே ஆணிகள் 77
விடுதலைப் பெருவெளியில் கலக்க 78
தூய்மைவாதப் போர்வை 80
நிறைவேற்ற முடிவதில்லை 82
பொறுத்தலும் காத்தலும் 84
காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது 86
தூரப் போய்விட்டார்கள் 88
தனித்து நிற்கிறேன் 90
விரிந்த அறை 92
தோற்றுப் போகிறார்கள்.. 93
கவிஞனாவது பெரும் பேறுதான் 94
நாடகத்திற்கான தருணம் 95
நீயும் நானும் 96

# தற்காலிகச் சலனங்களிலிருந்து விடுபடும் பயணம்

அனுபவச் செழுமை மிகுந்த படைப்புகளுக்கும் அவ்வாறு இல்லாத படைப்புகளுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கிறது. கற்பனை வளமும் படைப்புத் திறனும் இரு வகைப் படைப்புகளுக்கும் பொதுவானவை என்றாலும் அனுபவச் செழுமை கொண்ட படைப்புகள் வாசக மனங்களில் ஏற்படுத்தும் அதிர்வுகள் ஒப்பீட்டளவில் கூடுதல் காத்திரம் கொண்டவை. கனடாவில் வசிக்கும் கவிஞர் முரளியின் கவிதைகள் அத்தகையவை. அந்நிய மண்ணில் காலூன்றி நின்றாலும் வாழ்க்கை அங்கே வேரூன்றி வளர இயலாமல் தவிக்கும் அவஸ்தையையும் இவர் கவிதைகள் அழுத்தமாகச் சொல்கின்றன. மாறுபட்ட மண்ணில், மாறுபட்ட வாழ்நிலையில் தனிநபர் பெறும் அனுபவங்களும் உணர்வுகளும் எடுக்கும் வடிவங்களையும் பரிமாணங்களையும் இவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன.

புலம்பெயர் வாழ்வு என்பது மண்ணிலிருந்து பெயர்த்தெடுத்த மரத்தின் வலிக்கு ஒப்பானது. வாழ்நிலைசார் வசதிகள் பலவும் இருந்தும் தான் சார்ந்த மண்ணிலிருந்து பிய்த்து எடுக்கப்பட்ட வலி கடைசி மூச்சு உள்ளவரை மறக்க இயலாதது. அந்த வலி இந்தக் கவிதைத் தொகுப்பின் பக்கங்களில் அடிச்சரடாக ஓடுகிறது. சில இடங்களில் வெளிப்படையாகவும் உரக்கவும் ஒலிக்கிறது.

'எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை' என்னும் தலைப்புக் கொண்ட கவிதை இந்த வலியைத் துல்லியமாக உணர்த்துகிறது.

**எனது மண்ணிலிருந்து**
**நான் இடம்பெயர்க்கப்பட்டபோது**
**எனது மண்ணின் சில துணிக்கைகளும்**

**என்னோடு ஒட்டிக்கொண்டு**
**விலக மறுத்து**
**சகவாசம் புரிவதை**
**யாருக்கு நான் உணர்த்துவேன்**

*என்று முடியும் இந்தக் கவிதையைப் புலம் பெயர்ந்த அனைவரது துயரமாக நாம் வாசிக்க இயலும்.*

*

*புலம்பெயர் வாழ்வின் ஏக்கங்கள், இழப்புக்களைத் தாண்டி, இருத்தலின் சிக்கல்கள், வாழ்வை ஒளிரச் செய்யும் தருணங்கள், அன்றாடப் புழுதியை மீறி எழத் துடிக்கும் வேட்கை, விடுதலைக்கான கனவு ஆகியவைவற்றையும் முரளியின் கவிதைகளில் காண முடிகிறது. வாழ்வின் அடிப்படைகள் குறித்த கேள்விகளூடே தற்காலிகச் சலனங்களில் மனம் தோய்வது, தற்காலிகச் சலனங்களிலிருந்து வாழ்வின் மொத்த வீச்சையும் தழுவ யத்தனிப்பது ஆகியவற்றையும் இவர் கவிதைகளில் உணர முடிகிறது. எல்லைக்குட்பட்ட நிலத்தின் அனுபவங்களுக்குள் பரந்துபட்ட உலகையும் உணரும் மனநிலை இவர் கவிதைகளில் வெளிப்படுகிறது. சிறு தருணங்களினூடே பேரனுபவங்களையும் பேரனுபவங்களுளின் கருவில் ஒளிந்திருக்கும் சிறு தருணங்களையும் இவரது கவி மனம் தரிசிக்கிறது.*

*'காத்திருப்பு' என்பது பல பொருள்களைத் தரும் படிமமாக இவர் கவிதைகளில் தொழிற்படுகிறது.*

**இன்னும் ஒரு மணிநேரம்**
**காத்திருக்க**
**வேண்டிவரலாம்**
**அதற்கும் கூடுதலாக**
**இழுபடும்**
**வாய்ப்பும் இருக்கிறது**

*எனத் தொடங்கும் இக்கவிதை, அன்றாட வாழ்வில் காத்திருப்பின் வலியையும் சங்கடங்களையும் பட்டிய்லிடுகிறது.*

**எப்படியாவது சவாரி கிடைத்தால் சரி**
**கிடைக்காவிட்டால் என்ன செய்யலாம்?**

*எனச் சிந்திக்கிறார் கவிதைசொல்லி. காத்திருப்பின்போது நிகழும் மன அவசங்களைத் துல்லியமாகப் பின்தொடர்கிறார். மெல்ல மெல்ல அன்றாடங்களிலிருந்து விடுபட்டு மரங்கள், சூரியன் என இயற்கையுடன் இணைத்துத் தன் மன நிலையை அடையாளம் காண்கிறார்.*

**இன்னும் நான் காத்திருந்த சவாரி**
**வந்தபாடில்லை**
**எத்தனை ஓட்டங்களுக்காக**
**எவ்வளவு நேரம்**
**காத்துக் கிடந்திருப்போம்**

*என அலுத்துக்கொள்ளும் கவிதைக் குரல், கடைசியில்,*

**இந்தப் பொறுத்தலும் காத்தலும்**
**யாருக்கும் இருக்க முடியாது**

*என அறிவிக்கிறது. சவாரிக்காகக் காத்திருப்பதன் அகச் சலனம் வெறும் சவாரியுடன் நில்லாமல் காலம், இடம் தாண்டி அதிர்கிறது. வாசக மனங்களையும் அதிரவைக்கிறது. அகச் சலனங்களை நேர்த்தியான மொழியில், பல சமயம் வெளிப்படையாகவே, முன்வைக்கிறார் முரளி.*

*'காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது' என்னும் தலைப்புக் கொண்ட கவிதை மரணமடையும் ஒருவரின் இறுதிச் சடங்குகளின் சித்திரத்தைத் தருகிறது. மரண வீட்டில் ஒருவர் எதற்காகக் காத்திருக்கிறார்? மரணம் தரும் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு ஆசுவாசம் கொள்ளும் வேளைக்கான காத்திருப்பு இது. மரணம் எவ்வளவு வலி மிகுந்ததாக இருந்தாலும் மரணத்தைக் கண்ணுறுபவர்களுக்கு அது வாழ்வின் ஒரு பகுதிதான். மரணத்துக்குப் பின்னும் வாழ்க்கை தொடரும். தொடரத்தான் வேண்டும். மரணத்தைக் கொண்டு மரணத்தை எதிர்கொள்ள முடியாது. வாழ்வின் மூலம்தான் எதிர்கொள்ள வேண்டும். மரணம் தவிர்க்க இயலாதது எனினும் வாழ்வும் தவிர்க்க இயலாததுதான். வாழ்வின் மூலம் மரணத்தைக் கடக்க விழைகிறது மனித மனம். அதற்கான ஆசுவாசத்தைத் தரும் "வார்த்தைகளின் படருகை"க்கான காத்திருப்பு என்பது வாழ்வின் தொடர்ச்சிக்கான விழைவு.*

*

*எல்லா வலிகளையும் தவிப்புகளையும் தாண்டி வாழ்க்கைக்கான அர்த்தத்தைக் கொடுப்பது படைப்பு மனம். இந்தப் படைப்பூக்கம்தான் அன்றாடப் புழுதியிலிருந்து, காலம் பூட்டிய விலங்குகளிலிருந்து விடுவித்து ஆசுவாசம் கொள்ளச் செய்வது படைப்பு. வாழ்க்கையும் காலமும் நிகழ்த்தும் அனைத்து விதமான தாக்குதல்களிலிருந்தும் காக்கும் அரணாகத் திகழ்வதும் படைப்புதான். அந்தப் படைப்பின் அருமையை ஒரு படைப்பாளியால் துல்லியமாகவே இனம் கண்டுகொள்ள முடியும். அந்தத் தரிசனத்தையும் கவிதையாக்கியிருக்கிறார் முரளி.*

**கவிஞனாவது பெரும் பேறுதான்**
**தவம் புரிந்து கடைந்தெடுத்து**
**கற்களைக் கட்டு**
**இடறி வீழ்ந்து**
**உடைந்துபடாமல்**
**படிமங்களை**
**உருக்கி வார்**

**வடிவச் சிக்கலுக்குள்**
**உழன்று**
**வார்த்தைச் சித்தனாய்**
**ஆகிவிடாதே**

**உள்ளொளி பெருக்கி**
**உன்மத்தம்**
**கொண்டவனாய்**
**எழு**

**வெட்ட வெட்ட**
**வெளித்தள்ளலாய்**
**வா**

*என்று படைப்பு மனம் அறைகூவல் விடுக்கிறது. காலத்தை எதிர்கொள்ளும் கருவியாய்க் கவிதையையும் மொழியையும் ஏந்தி நிற்கிறது.*

*எல்லா விதமான அனுபவங்களையும் அவை தரும் தற்காலிக வேதனைகளையும் இன்பங்களையும் தாண்டி, விடுதலையை நாடும் மனதின் குரல் முரளியின் கவிதைகளில் கேட்கிறது. அந்தக் குரலை அடையாளம் காட்டும் வரிகள் இவை:*

**விடுதலைப்**
**பெருவெளியில் கலக்க**
**வீட்டைத் துறக்க**
**இவ்வளவு விருப்புடையவனா நான்!**

*முரளியின் கவிதைகளில் உள்ளார்ந்து நிற்கும் இந்த விருப்பம் பாசாங்கின்றித் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. அதுவே அவரது கவிதைகளின் வலிமையாகவும் திகழ்கிறது.*

**அரவிந்தன்**

**சென்னை**
**ஜனவரி 17, 2020**

# என்னுரை

நீண்ட காலக் கவிதைப் பாரம்பரியத்தைக் கொண்டது தமிழ் இலக்கியம். அந்தத் தமிழ் இலக்கிய வரலாறு பல்வேறு கவிஞர்களால் பல்வேறு வகையான விடயங்களைப் பேசுபொருளாக கொண்ட கவிதை வரலாற்றைத் தன்னகத்தே உள்ளடக்கியிருக்கிறது.

கவிதைகளை எழுதும் ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஓர் உந்துதல் கவிதைகளைப் படைக்க அவர்களை முன்தள்ளியிருக்கிறது. அந்த எழுத்து முறை நாவல், சிறுகதை போன்ற ஆக்க இலக்கியங்களில் இருந்து வேறுபடுகிறது. நீண்ட பல பக்கங்களில் எழுதப்படுவதாக கவிதை அமைவது கிடையாது. ஆனாலும் நல்ல ஒரு கவிதையை ஆக்குவது சுலபமாக அமைந்துவிடுவதில்லை. பெரும்பாலும் அதை எழுதுபவன் தான் திருப்தியடையும் வரைக்கும் மாற்றங்களை, திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கக்கூடிய வடிவமாகவும் கவிதை வாய்க்கப் பெறுகிறது.

படிமங்கள், குறியீடுகள் மூலம் ஆழ்மன உணர்வுகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், வெற்றிகள், அநுபவ வெளிப்பாடுகள் எனப்படுபவைகளைச் சித்தரிக்க முயலுகையில் அதனைக் கட்டியெழுப்ப ஆக்கதாரி கடுமையாக உழைக்க வேண்டிவருகிறது. சில வேளைகளில் படைப்பாளியின் உத்வேகம் அதனைச் சுலபமாக கடந்து செல்லும் சூழலையும் கொண்டிருக்கிறது.

கடந்த முப்பது வருடங்களாக மேற்குலக நாடுகளில் வாழ்ந்துவரும் என்னைப் போன்றவர்கள் ஆறாம் திணையான பனி நிலத்தில் வாழ்ந்துவருகிறோம். ஆனாலும் எமக்கு இந்த நிலம் பிடிபடுவதில்லை. மரங்களோ, பறவைகளோ, மண்ணின் வகை வேறுபாடுகளோ சொற்பமே தெரிந்திருக்கிறது. இரண்டு வகையான

வாழ்முறைகளுக்குள் ஊடறுத்தவர்களான எங்களுக்குப் பிறந்து வளர்ந்த தாயகத்தின் நிலக்காட்சி மனதுக்கு மிகவும் நெருக்கமாக அமைவதும் அது குறித்த அறிவும் பிரக்ஞையும் மேலோங்கி நிற்பதும் இயல்பானவையாகும்.

எமது மண்ணின் மரங்களும் பறவைகளும் இயற்கைக் காட்சிகளும், பருவ காலங்களும் எமக்குத் தந்த களிப்பை நாம் இங்கு பெற முடியாதபோதும், அதை நோக்கி நாம் உருகுவதும் ஒப்பிடுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதேவேளை எம்மைப் பிரமிக்க வைக்கும் புவிக் காட்சிகள் நிறைந்த நிலப் பகுதிகளைக் கொண்ட நிலங்கள்தாம் இவை.

மலைகளும் எண்ணிறைந்த ஏரிகளும் நீண்ட நிலப் பரப்புகளும் விசாலமான விவசாயப் பண்ணைகளும் செறிந்த தொடர்ச்சியான மரக் காடுகளும் பனிப் புயலும் விறைக்க வைக்கும் குளிர் காலநிலைகளும் எமக்கு வியப்பை ஊட்டுபவை.

மேலும் புலம்பெயர்ந்த இந்த நாடுகளில் எங்கள் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளக் கடுமையாக உழைப்பவர்களாக நாம் இருக்கின்றோம். கனடா நிலப்பரப்பில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய நாடு. பிரிட்டிசார் கைப்பற்றிய, காலனித்துவ நாடான கனடாவில் இந்த நாட்டின் பூர்வகுடி மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது இன்றைய வாழ்வு பெரும் துயரங்களைக் கொண்டது. அவ்வாறான சூழலில் ஒரு அடக்குமுறையில் இருந்து தப்பிப் பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்து இந்த மண்ணில் எங்களை நிலைப்படுத்தும் விசித்திரம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அவற்றை உணர்வதும் அடக்குமுறை எங்கு நிகழ்ந்தாலும் அதை எதிர்க்கும் தார்மிகத்தை நாம் இழந்துவிடலாகாது என்ற நிலைப்பாடு முக்கியமானது.

எனது கடந்த கால அரசியல் ஈடுபாடுகளால் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமையற்றவனாக, குடியுரிமையற்றவனாக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். எனது சொந்த மகனை இந்த நாட்டில் இழந்திருக்கின்றேன். இலங்கையிலும் நீண்ட காலம் சிறையில் இருந்திருக்கின்றேன். இன்னும் வேறு நாடுகளிலும் சிறைப்பட்டிருக்கின்றேன்.

*சித்திரவதைப்பட்டிருக்கின்றேன். இலங்கைக்கும் திரும்பிச் செல்ல முடியாதவனாகவே என்னை உணருகின்றேன். எனவே இங்குள்ள எமது மக்கள் அனைவரையும்விட ஒப்பீட்டு அடிப்படையில் எனது மனநிலை வேறுபடுகிறது என்றே கருதுகிறேன். ஏனெனில் குடும்பம் இருந்தும் பல வேளைகளில் தனிமையில் அந்தரிப்பதாகவே என்னை நான் உணருகிறேன்.*

*இவ்வாறான வாழ்வுக் கட்டங்களிடையே ஆங்காங்கே அவ்வப்போது என்னால் எழுதப்பட்டவைகளையே இந்த தொகுப்பில் சேர்த்திருக்கின்றேன். இதை ஏற்பதும், மறுப்பதும், விமர்சிப்பதும் உங்கள் உரிமை. இந்த தொகுப்பைக் கொண்டுவர மெய்ப்புப் பார்ப்பது உட்பட பல விதங்களிலும் உதவிய எழுத்தாளர் அரவிந்தனுக்கு நன்றி! என்னைப் பல வகைகளிலும் உற்சாகப்படுத்திய எழுத்தாளர் இமையத்துக்கும் நன்றி!*

**ந.முரளிதரன்**
36, Salmander Street
Scarborough ON
CANADA
nmuralitharann@gmail.com
647-972-3619

## கதை சொல்லுகிறான்

அவன் இறுதியாக
என்னிடம்
உண்மையைச் சொல்வதாகச்
சொன்னான்
அவளைக் கண்டதாக

அருகிலிருந்த வேளையில்
அவளைத்
தீண்டவில்லை என்கிறான்
ஆனால் இன்று
கட்டுண்டு காத்திருப்பதாகக்
கதை சொல்லுகிறான்

இன்று வெறிச்சோடிக் கிடக்கும்
அந்தக் கிராமத்தின்
ஒரு மூலையில்
அவள் தன்னை
எதிர்பார்த்த வேளையிலெலாம்
பட்டாம்பூச்சியாகத் தான்
பறந்த திரிந்த
கதை சொல்லுகிறான்

திரண்ட தசைகளின்
பூரிப்பில்
தட்டுத்தடுமாறித்
தன்னை இழந்த
இளமைக் காதையையும்
அவன் பாடுகின்றான்

சிரிப்பும் அழுகையுமாய்
அந்தக் கிராமம்
ஆடியும் பாடியும்
ஆன வரலாறு
இன்றும்
எழுதப்பட்டதாகத்
தெரியவில்லை

எழுதாத அந்தக் கதைகள்
புதைக்கப்பட்டாயிற்று
வரலாறு
எரிக்கப்பட்டாயிற்று
மீண்டும் முளைத்தெழல்
நிகழும் வாய்ப்பே
இல்லாமலாயிற்று

ஆனால்
அவளும் அவனும்
இணைகின்ற வேளைகள்
புதிய சரிதத்தை
புரட்டிப் போடுமென
இவன் புரளி கிளப்புகிறான்

*2004*

## நான் பசியாயிருக்கிறேன்

நண்பன் தொலைபேசியில்
சொன்ன அந்த வார்த்தைகள்
என்னை இடைமறித்த வேளையில்
வளைந்தோடிய
அந்தச் சாலையில்
நெளித்தபடி
அழுக்காடை அணிந்திருந்த
அந்தப் பெண்
நான் பசியாயிருக்கிறேன்
என்று எழுதிய
பதாகையைப் பிடித்தபடி
நின்றிருந்தாள்

சாலையோரங்களின்
உள் திருப்பங்கள்
வழியே
இவ்வாறான பல
மனிதர்களை
நான் பார்த்தபடி

என்றுமே சில்லறைகளை
இவர்களுக்கு
உவந்தளிக்க
என் மனம் ஏவியதில்லை

ஊர்க் கோவில்களிலே
பேருந்துத் தரிப்பிடங்களிலே
திரையரங்க வளாகங்களிலே
எமது பிச்சையாளர்கள்
கைகளை ஏந்துகையில்
கசிந்த மனம்
இங்கு இது ஏதோ
பசப்பு என்று முடிவெடுக்கிறது

தனியொரு மனிதனுக்கு
உணவில்லையெனில்
இந்த ஜெகத்தினை
அழித்திட வேண்டாம்
என நினைத்துக் கொள்ளுகிறேன்

## தெளிவுரை

அந்த அடர் வனம்
நடுநிசி ஓநாய்கள்
ஊளையிடும் கானகம்
மலைப்பாம்பாக
எனது வாகனம்
ஊர்ந்து கொண்டிருந்தது

வண்டியிலிருந்து
இறங்கியதுமே
நாசித்துவாரங்களை
ஊடறுத்துச் சென்றது
இமைய மலைச்சாரல்
மூலிகையின்
புகைந்து கருகிய மணம்

கொப்புகள்
கொழுந்து விட்டெரிந்தன
கூடாரம் அருகே

போகிகள் இருவரும்
புகை இன்பத்தில்
கிறங்கிக் கிடந்து
சுருள் சுருளாய்
வெளிவிட்டுக் கொண்டிருந்தனர்
புகை வளையங்களை

ஆயினும்
தம்மிடத்தில் தங்கியிருந்த
பெண்களையும்
பிள்ளைகளையும்
இன்னும் பிற சிந்தாந்திகளையும்
காட்டு விலங்குகளிடமிருந்து
காத்தல் என்பதும்
அவர்களது
இருத்தலில் ஒன்றாய் இருந்தது

மயானத்து இரு அரிச்சந்திரர்களும்
கொள்ளிக்கட்டைகளைப்
புரட்டியும் கிளப்பியும்
முறித்தும் நெரித்தும்
தீயின் எழுகையால்
ஒரு யாக வேள்வி ஆட்டம்
புரிவதான காட்சி அது

சந்திரமதிகளும் தேவதாசர்களும்
ஆழ்துயிலில் எழுப்பிய
குறட்டை ஒலி
இருளிடை வெளியை
இல்லாதொழித்தது

கறுப்பு இருள்
காவி வந்த
அந்த மாய வாசனை
என் கப உச்சியை
அடித்து உலுப்பியது
அந்தரத்தில் பறக்க
எனைக் கிளப்பியது

அத்தருணம்
கொடும் இருளைக்
கிழித்து
கிழக்கு மூலையில்
பூத்தெழுந்தது
ஓர் வால் வெள்ளி

அந்த ....
அதே வால் வெள்ளியின்
அடிப்பாகத்தில்
வீற்றிருந்த
எம் பெருமான் "ரூடோ"
மூலிகையின் வீரியத்தைப்
பறைசாற்றி அதனை
சட்ட ஏற்றுகைப் பட்டியலில்
இடுகிறேன் என
மரபு சார் சடங்கு உடை
மாந்தர்க்கு
தெளிவுரை ஆற்றலானார்

*(2016)*

## அறுபடாத நூலிழை

பெட்டி தூக்கி எறியப்பட்டது
சுற்றமும் முற்றமும் அதிர்ந்தது
அனாதரவாகக் கிடந்த
அந்தப் பெட்டிக்கதவுகளின்
இடுக்கு வழியே
வெளித்தள்ளிய
அந்தப் பளபளத்த துண்டுத்துணி

குறைந்த படிக்கு
ஒன்றரை அல்லது இரண்டு
தசாப்தங்களுக்கு முந்தைய
அதி இளம்பருவத்துக் காதலின்
சாட்சியமாய்
இருந்திருக்க வேண்டும்

அதனால்தான் போலும்
இன்றும் அது
அறுபடாத நூலிழையாகத்
தொங்கிக் கொண்டேயிருக்கிறது

ஆயிரம் மைல்கள் கடந்தும்
அந்தப் பயணங்கள்
இன்றும் தொடர்ந்து
கொண்டேயிருந்தது

இடையே
எங்கிருந்தோ வந்த எக்காளம்
அவதூறு
செய்யப் புறப்பட்டுவிட்டாயா .....
என்று ஓங்கி ஒலித்த
அந்தக் குரல்
குரல்வளையை நெரித்து
மண்டையால் மூக்கை மொத்தி
என் மீதான
அதி தீவிர வன்முறையைக்
குதூகலத்துடன்
நடத்தலாயிற்று

எனது விழிகள்
பெட்டியைத்
தூக்கியெறிந்தவனது
அதிகாரத்தையும் அரசியலையும்
நோட்டமிட்டபடியே இருந்தது

அது
அதுவும் அவதூறும்
இரண்டறக் கலந்த
ஒளிப்பெருவெள்ளமாய்
உன்னத தத்துவத்தை
முகநூலில்
முன்னெடுத்துக்கொண்டிருந்தது

*(2017)*

## இரகசியம்

நண்பன் சொன்ன
இரகசியத்தை
பெட்டியிலை போட்டுப் பூட்டி
சாவியையும்
என்னுடன் கொண்டு திரிந்தேன்

அந்த இரகசியம்
பொரிச்சு குஞ்சாகி
பெட்டிக்கு வெளியே
தீனி தேடி
அலையக் கண்டேன்

பெட்டிக்கு
நிலைக்குத்தாக
வானில் பருந்தொன்று
குஞ்சைக் குறிவைத்து
வட்டமிடுவதையும்
கண்டுகொண்டேன்

தீனி
கதையாகவும்
கவிதையாகவும்
இருப்பதாக குஞ்சு
குறைப்பட்டுக்கொண்டது

அவ்வழியே வந்த
சேவலொன்று
வடலி வளர்த்துக்
கள்ளுக் குடிக்கும்
கனாவில்

குஞ்சை தத்தெடுத்துப்
பராமரிக்கும் வேலையைத்
தன்னகத்தேயாக்கியது

எலுமிச்சை மரத்தின்
கீழே
சாம்பல் குளித்த
பேடு ஒன்று
குஞ்சின் தாயாகத்
தன்னை வேடமிட்டு
தன் சிறகினுள் குஞ்சுக்கு
அடைக்கலம் கொடுத்தது

பருந்து
வைத்த குறியிலிருந்து
மீளுவதாய் இல்லை

சேவலும்
பொறுமை காத்துக்
கிடக்கிறது

சுடலையில்
மாடனின் குரைத்தல் ஒலி
இந்த யுகம் வரை
நீளும் உத்தேசத்தில்

ஆனாலும் சிறகுகளின்
அரவணைப்பில்
அந்த மென் சூட்டின்
கதகதப்பில்
குஞ்சு
இந்த உலகத்தை
மறந்து கிடக்கிறது

*2017*

## எனது அடையாளப் பொறிப்பு

*நான் காத்துக் கிடந்த*
*சூரியன்*
*வந்து விட்டான்*

*அழுக்குப்  படிந்திருந்த*
*தெருக்கரையோரப் பனிக்குவியல்கள்*
*உருச்சிறுத்தபடி*
*தம்மை இழந்துகொண்டிருந்தன*

*நான் ஓடிக்கொண்டிருந்த*
*வாகனத்தின்*
*உள்ளகச் சூடேற்றிக் குறிகாட்டி*
*பூச்சியப் புள்ளியில்தான் உள்ளதா*
*என்று  ஒருமுறை*
*சரி பார்த்துக் கொண்டேன்*

*மூன்று நான்கு அடுக்குகளாக*
*நான் இதுவரை போர்த்தியிருந்த*
*ஆடைகளிலிருந்து*
*இப்போதைக்கு*
*எனக்கு விடுதலை கிடைத்திருந்தது*

*வாடிக்கையாளனை இறக்கிவிட்டு*
*இலக்கியவாதியின்*
*பல்லாண்டு காலப் பணியைப்*
*பாராட்டும் நிகழ்வுக்காய்*
*நான் அந்தரப்பட்ட வேளையில்*
*வாகன நெரிசலில் சிக்குண்டேன்*

இலக்கியம் என்று
போனாலும்
பல பத்துப் பக்கங்களை
பார்த்து வாசிக்கும்
ஆய்வுப் பெருந்தகைகளின்
நெரிப்பில்தான்
உழல வேண்டி வரும்
என்பது நன்கு தெரிந்திருந்தது

ஆயினும்
பங்குபெறுதலில்
எனது அடையாளப் பொறிப்பும்
அடங்கியே இருந்தது

உலகிலேயே
கடினமான தொழில்
'இலக்கிய எழுத்து' என்று
நான் நம்புவது
என்னை இலக்கிய அரங்கங்களுக்கு
இழுத்துச் செல்கிறது

இறுதியாகப் படம்
எடுத்துக்கொண்டேன்
அடுத்த கணம்
முகப்புத்தகத்தில் ஏற்றி
அதற்கான நாலு வரிகளை
எழுதினேன்

இப்போது
காத்துக் கிடக்கிறேன்
விருப்புக்குறிகளுக்காய்...!

*(2018)*

## சூரியனின் வரவு

சூரியனின் வரவு
அவளை
அச்சமுற வைக்கிறது
நேற்றைய நள்ளிரவில்
நான் சந்திரனைத்
தேடியலைந்தது
அவளுக்குத் தெரியவில்லை

ஓராயிரம் நட்சத்திரங்களைக்
கடந்த நான்
இன்னும்
பால் வெளியில் பவனி வரவே
ஆசைப்படுகிறேன்

இளமை இன்னும் முறுக்கேறி
இந்த வயதில்
என்னை வதைக்கிறது
வசந்தத்தின் வருகை
நாடி நரம்புகளில்
புதிய குருதியைப்
பாய்ச்சி நிற்கிறது

மடி மீது துயின்று
தலையை வருடும் கணங்களுக்காக
காத்திருக்கும் என்னை
எங்கு தேடப் போகிறீர்கள் ?

*புளிய மர வளவுப் பக்கமாக*
*வடலிப்பனை ஓரமாக*
*வாடிவீட்டுக் கடற்கரைப் பக்கமாக*
*அம்மன் கோயில் முன்றலில்*
*வாசிகசாலைப் படிக்கரையில்*
*கேணியடி மாமரத்தின் கீழ்*

*எதுவுமே இங்கு*
*நிகழப் போவதில்லை*
*எல்லாமே*
*கனவுகளாக*
*நினைவுகளாக மட்டுமே*

*(2015)*

## அந்த மலர்கள்

*வானம் மந்தாரமாகக்*
*கிடக்கின்றது*
*வெளி*
*ஒளியை இழந்தபடி*

*நேற்று வெட்டிய*
*புல்லுகளுக்கிடையில்*
*மீண்டும்*
*மஞ்சள் நிற "டான்டிலைன்"*
*பூத்தெழுந்து நிற்கிறது*

*கதைகளுக்கிடையே*
*வந்து விழுவதில்*
*எதையாவது*
*பொறுக்கி*
*நிமிர்த்தலாமென்றால்*
*கதைப்பார் எவரும்*
*வெட்டியே ஓடுகின்றனர்*

*கண்ட பாட்டுக்கு*
*எழுதினால்*
*மற்றவர்கள் சந்தேகப்படுவார்கள்*

*பிரிந்து பிரிந்து*
*புதியவைகளைக் கொணர்ந்து*
*இணையும் வேளைகள்*
*எப்போதும் நண்பர்களால்*

கொண்டாடப்படுகிறது
உரியவர்கள் வெட்கப்பட்டு
ஒதுங்கினாலும் கூட

நாலு வரி எழுத
மா காவியங்களைப் படிக்கும்
பொறுமை
இப்போதெல்லாம்
எனக்கு வாய்ப்பதில்லை

நாளும் பொழுதும்
கிறுக்குவோம்
நம்
அடையாளத்தையும்
விடக்கூடாது அல்லவா

மீண்டும்
புல்லு வெட்டு இயந்திரத்தினை
முடுக்கி விட்டுள்ளேன்

மஞ்சளாய்
முகையவிழ்ந்த மொட்டுகளை
ஆம் களைகள் என்று
கருதியே
வீழ்த்தவும் வெட்டிச் சாய்க்கவும்
வெளிக்கிட்டு விட்டேன்

ஏன்
அந்த மலர்கள்
அழகாகத்தானே உள்ளன

*(2015)*

## அந்த இரவு

இரவின் மீது பிரியமுடன்
நடந்து செல்லும்
நாளை நோக்கிக்
காத்திருக்கும் எனக்கு

ஒளியை இழந்த
அந்த இரவினைக் கடப்பது
என்றும் போல்
அன்றும் கடினமாயிருந்தது

சந்திரன் தொலைந்து
நட்சத்திரங்கள்
விழுங்கப்பட்ட
அந்த இரவு

காற்றில் எழுதப்பட்ட
வரிகளை
சுவாசிக்கவும் திராணியற்ற
அந்த இரவு

காலமெல்லாம் கிளர்ந்தெழும்
காமத்தை மறுத்த
அந்த இரவு

உறைந்து போய்
ஒரு வெளியாய்
திரண்டு போயிருக்கும்
அந்த இரவு

எனக்கு வேண்டிய சேதிகளைச்
சொல்ல மறுத்து
நிற்கிறது

# தேடும் என் தோழா

*சூரியப் பந்தத்தைக்*
*கைகளால் பொத்தி*
*அணைத்து விட்டு*
*சந்திரனுக்கு ஒளியைப்*
*பாய்ச்சி விடும்*
*கைங்கரியத்தில்*
*ஆழ்ந்து போயிருக்கும்*
*என் தோழா*

*நீ புனைவுக்காரன்*
*சூனியமான சந்திரனைப்*
*பிரவாகம் கொள்ள வைத்தது*
*உனது கவிதைகள்தான்*
*என்று கூறுவாய்*

*பாய்ந்து வந்த கோடானுகோடி*
*கதிர் வெள்ளத்தின் நதிமூலத்தை*
*அங்கீகரிக்க மறுத்த*
*கற்பனாவாதி நீ*

*சாவுக் களங்களில்*
*கொள்ளிக் குடங்கள்*
*துளையுண்டு*
*தண்ணீர் கொட்டும்*
*வேளைகள்*
*வாய்க்கரிசி நிறைந்து*
*வழியும் கணங்கள்*
*நட்சத்திரங்கள்*

எரிந்து வீழும்
பொழுதுகள்
எனது கனவுகளைக்
குலைத்து விடுகின்றன

எனவேதான்
நித்தியத்தைத்
தேடியலைய
என் ஆன்மா
மறுத்து விடுகின்றது

ஆழ்ந்து மோனித்து
கடைந்தெடுத்து
உன்னையும் காணாது
என்னையும் கண்டடையாது
இறுமாப்பில் பெருமிதம்
கொள்ளும் என் தோழா

யுகங்களாய்
தொடரும் தேடல்கள்
முற்றுப்புள்ளியைத் தேடி
முடிவிலி வரை
பயணம் புரிகின்றன

## என்னவர்களை நோக்கியே...

இச்சைகளைத் தூண்டும்
பிரதேசங்களை நோக்கியே
பார்வை
தெறித்தோடுகின்றது

மேடுகளையும்
பள்ளங்களையும்
நுனிப்புல் மேய்ந்தவாறே

மனைவியோடு
பிள்ளையோடு
நண்பனோடு பேசாத
கனிவான வார்த்தைகள்
அங்கு கொட்டுகின்றன

அன்றொரு நாள்
யேசு வாங்கிப்
பெற்றுக்கொண்ட
கற்களைக் கூடைகளில்
சேகரித்துக்கொண்டு
எறிவதற்காய்
எல்லோரையும் நோக்கி
குறிபார்த்தல் தொடருகிறது.

வார்த்தைகளை
இரவல் வாங்கியவனாகி
விடக்கூடாது
என்பதற்காய்
வாசித்தலையே மறுத்து
துறவறம் பூணுகின்றேன்

ஆயினும்
பிரபஞ்சமெங்கணும் இருந்து
எனக்கான
படிமங்களை வேண்டியும்
இன்னும் அதற்கு மேலாயும்
இரந்து வேண்டி
இன்னுமோர் தவத்தில்
மோனித்திருப்பதாய்
கூறிக்கொள்ளுகின்றேன்

எனினும்
ஓங்கியொலிக்கும்
மனித ஓலம்
பெருக்கெடுத்தோடும்
மனிதக் குருதி
மூச்சுக் குழல்களை
அடைத்து நிற்கும்
பிணவாடை
என்னை மீண்டும் என்னவர்களை
நோக்கியே
அழைத்துச் செல்கிறது

## திமிரெடுத்து நிற்கின்றன

*எப்படி மனிதர்களை அளப்பது?*
*பல கருவிகளைப் பயன்படுத்தி*
*அளக்க முடியும் என்று*
*எனது மனைவி கூறுகிறாள்*
*அந்தக் கருவிகள்*
*அனைத்தையும் பயன்படுத்தி*
*அவள் என்னையும்*
*அளந்திருப்பாள்*
*என்றே எண்ணுகின்றேன்*

*அப்படியெனில்*
*அவளால்*
*எப்படி என்னோடு கூடவே*
*வாழ முடிகின்றது*

*மனங்களின் நெருக்குவாரத்தில்*
*சிக்கியிருக்கும் கழிவுகளை*
*அகற்றுவதற்கான துவாரங்கள்*
*அடைபட்டுக் கிடக்கையில்*
*அவற்றினை*
*வாயு மூலக்கூறுகளாக*
*கவர்ச்சிவிசை குறைந்த துணிக்கைகளாக*
*மாற்றிவிடுவதற்கான பிரயத்தனத்தில்*
*ஈடுபடுவதாகவே*
*என் மீது எனக்கோர் சந்தேகம்*

ஆனாலும் எனது மனைவி
என்னை அப்பழுக்கில்லாதவனாகக்
கருதுவதாகவே
உள்ளூர உருவகித்துப்
புளகாங்கிதமடைந்துகொள்கின்றேன்

பகற்பொழுதினில்
அகண்ட வெளிதனில்
ஐதாக
அலைந்து திரிந்த
அந்தத் துணிக்கைகள்
இரவானதும்
தங்கள சுயத்தைக் காட்டுதற்காய்
திமிரெடுத்து நிற்கின்றன

## எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை

*எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை*
*அந்த அவாவினை*
*என் நினைவின் இடுக்கிலிருந்து*
*பிடுங்கியெறிவதையே*
*என் எதிரிகளும்*
*என்னவர்களும்*
*இடைவிடாது புரியும்*
*தொழிலாகக் கொண்டுள்ளார்கள்*

*எனது கனவுகளின் போதே*
*சாத்தியமாகியுள்ள*
*அந்த நினைவுப்படலத்தை*
*எனது அன்புக்குரியவளே*
*நீயும் சிதைத்து விடாதே*

*மூடுண்ட பனியில்*
*அமிழ்ந்து போய்*
*சுவாசம் இழந்துபோய்*
*நான் தவிப்பதுவாய்*
*நேற்றும் ஓர் கனாக் கண்டேன்*

கோடை தெறித்த வெய்யிலில்
கருகும் உயிரினத்துக்கான
உஷ்ண வெளியில்
பிறந்த நான்
கனவுகளில்
உயிர் பிழைப்பதாய்
நீ நம்புவாய்

ஆனால்
எனது மண்ணிலிருந்து
நான் இடம்பெயர்க்கப்பட்டபோது
எனது மண்ணின் சில துணிக்கைகளும்
என்னோடு ஒட்டிக்கொண்டு
விலக மறுத்து
சகவாசம் புரிவதை
யாருக்கு நான் உணர்த்துவேன்

## அரசியல் விலங்கு

எங்கும் எல்லாமே
எனக்கு நேரம்
தாழ்த்தி விடுகின்றது
ஒரு கவிதையை
ஒரு கட்டுரையை
எழுதுவதற்கு நீண்ட நேரம்
எடுத்துக் கொள்ளுகின்றேன்

நீயோ புன்னகைத்து
என்னை வெற்றி
கொண்டு விடுகின்றாய்
நானோ அலைகளின்
தீராத சுழற்சியில்
கட்டுண்டு அலைகின்றேன்

கருத்துக்களுக்காகவும்
கற்பனைகளுக்காவும்
என்னை நீ
நாடி வருவதாகச்
சொல்லிக்கொள்ளுகிறாய்

ஆனால் நானோ
சொற்கள் எழுப்புகின்ற
வெம்மையோடு
மோதிக்கொள்பவனாகக்
கொடூரம் கொண்டு
எகிறுபவனாக இருப்பது
உனக்கு
மகிழ்ச்சியை அளிக்கின்றது

என்னை இலக்கியக்காரனாக
நீ ஏற்றுக் கொள்ளாததையிட்டு
எனக்கு எந்தத் துயரமும்
கிடையாது
அதற்காக எந்த அபத்தத்தையும்
என் மீது திணித்து விடாதே

நான் ஒரு
அரசியல் விலங்குதான்
என்பதில் எனக்கு
எப்போதுமே
உடன்பாடு உண்டு

அப்படியாயின்
வெறும் விலங்காக
மட்டுமே
ஏன் என்னை
உற்றுப் பார்க்கின்றாய்

## மீண்டும் போருக்கான அறைகூவல்

*நான் கேளிக்கைகளில்*
*திளைக்கின்றேன்*
*ஆனாலும் அவர்களைப்*
*போரிடுமாறு அழைக்கின்றேன்*
*ஏனெனில் அவர்கள்*
*அடக்குமுறைக்கு உள்ளாவதால்*

*எனது பங்குகளை உரியமுறையில்*
*செலுத்துவதாகவும்*
*கதை சொல்லுகின்றேன்*

*ஆனால் அவர்கள்*
*கரங்கள் துண்டிக்கப்பட்டு*
*கால்கள் தறிக்கப்பட்டு*
*குதத்தால் உண்டு*
*வாயால் கழிவுப் பொருட்களை*
*வெளியேற்றிக்கொண்டிருக்கின்றார்கள்*

*பத்திரமாக எனது பிள்ளைகள்*
*பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்*
*மகுடங்களைச் சூடிக்கொள்கின்றார்கள்*

*வாழாத நாடொன்றின் தலைவிதியைத்*
*தீர்மானித்தற்காய்*
*மக்களே திரண்டெழுங்கள்*
*என்ற கோசத்தை*
*அடிக்கடி முழங்குகின்றேன்*

*அதன் தொடர்ச்சியாய்*
*இப்போது நான்*
*மாலைநேர மேடையொன்றிலே*
*எழுச்சி உரையொன்றை ஆற்றுதற்காய்*
*என்னைத் தயார்படுத்திக்கொண்டிருக்கின்றேன்*

*(2010)*

## இன்னுமொரு வேளை எழுதுவேன்

*நான் சிறு பையனாக*
*இருந்த வேளை*
*எனது அம்மம்மா சொல்வாள்*
*தான் பிறந்த வாழ்ந்த*
*ஓடு வேய்ந்த*
*சுண்ணாம்புக் கட்டட வீடு பற்றி*

*ஊடுருவி உறைந்து*
*காலக்கண்ணாடியில் படிந்து*
*சடத்துவமாய் காட்சி தந்து*
*மூலக்கூற்றுக் கவர்ச்சி விசையிலிருந்து*
*பிரிந்து அவை*
*எங்கே செல்ல முடியும்*

*அந்த வேளையில்*
*அது அழிக்கப்பட்டு*
*அதன்மீது குந்தியிருந்தது*
*இன்னுமோர் சீமெந்துக் கட்டட வீடு*

*என்னுள் அடங்கிய*
*ஆர்ப்பரிப்புச் சுழல்களின்*
*மூல இருப்பை*
*சுருங்கிய ஆதாரத்தின்*
*மைய மோகிப்பை*
*உந்தித் தள்ளிய விசையின்*
*திமிறலை*
*என்னால் எடுத்துரைக்க முடியாது*

சூழ இருந்தது தோட்டம்
மா பலா வாழை மாதுளை
எலுமிச்சை வேம்பு பனை தென்னை புளியென
எல்லாமே அங்கு பூத்துக் கிடந்தது
கல் விளைந்த அப்பூமியில்
என் முன்னோர் பயிர் விளைக்க
முனைந்த கதை
கழிவிரக்கத்தால்
இங்கு பாடுபொருள் ஆகியது

எனது அப்பு பென்சனில் வந்து
அந்த மண்ணுக்குள்ளே
புதைந்துகொண்டு
வெளியே வர மறுத்தார்
தனது ஊனினை உருக்கி
ஓர் தவம் புரிந்தார்
பச்சைத் தாவரங்களின்
தழுவல்களுக்கிடையில்

சேர்ந்து சுகித்த
காலங்களின் வதையை
மோதி உராய்ந்து
சுக்கிலத்தைச் சிதறியும்
கலத்தில் ஏற்றியும்
ஏறியும் புரண்டும்
உச்சத்தில் ததும்பியும்
மது வேண்டியும்
திளைத்து நின்ற
இழந்த அந்த மண்ணின்
வரலாற்றை
நான் எப்படியும்
இன்னுமொருமுறை எழுதுவேன்

## உயிர்த்தெழுந்து பார்

*நீ கறை படிந்தவன்*
*எப்படி எமது புனிதப்போரில்*
*உன்னை எம்மோடு*
*இணைத்துக் கொள்வது*
*கங்கையிலே மூழ்கி*
*இமயமலையின் உச்சியிலே*
*ஏறியமர்ந்து எத்தனை*
*தவமியற்றினாலும்*
*உனது பாவங்களைக்*
*கழுவ முடியாது*

*உனக்குத் தேவர்கள்*
*வரமளித்து*
*உன்னை மீட்டெடுப்பார்கள்*
*என்று மனப்பால் குடியாதே*

*நீ மதம் மாறிப்*
*பாவமன்னிப்புக் கோர*
*எந்தத் திருச்சபையும்*
*உன்னை அனுமதிக்கப் போவதில்லை*

*நாங்கள் புனிதர்கள்*
*அதனால்*
*எத்தகைய கேள்விகளுக்கும்*
*உட்படுத்தப்பட முடியாதவர்கள்*
*ஆதலால் தீர்ப்பு வழங்கும்*
*பேறு பெற்றவர்கள்*

*எனவேதான் உன்னைச்*
*சிலுவையில் அறைகின்றோம்*
*முடியுமானால்*
*மூன்று நாள் கழித்து*
*உயிர்த்தெழுந்து பார்*

## காத்திருக்கிறேன்..!

ஒடுங்கிய உடற்கூட்டிலிருந்து
வழிந்து விழுந்த
ஊனமாய்
எகிறிப் பாய்ந்த
இச்சைகளாய்
இன்னும் என்னவாயோ
எல்லாம் சில
என்னுள் அடியுண்டு கிடக்கின்றன

அனைத்தையும் சுமந்துகொண்டு
எனது நடைபாதைப் பயணம்
தொடருகின்றது

விளங்காத கதையொன்றை
வெறி கொண்டு வாசிக்கும்
சிலரைப் பார்த்து
அசட்டை செய்யாது
அகன்றுகொண்டிருக்கிறது
பெரும் மக்கள் கூட்டம்

அந்தக் கூட்டம்
எழுப்பிய பேரொலி
இன்னும் ஓயவில்லை
அது எழுப்பிய
அலை வெள்ளத்தில்
அனைவரும்
அடித்துச் செல்லப்பட்டனர்

அன்றொரு நாள் நான்
காலணியற்ற பாதத்துடன்
நடந்துகொண்டிருந்தபோது
பாதம் பதித்த நிலமெலாம்
எமது நிலம் என்றார்கள்
இன்னும் சிலர் ஆங்காங்கே
ஒடிந்து கிடந்த
துண்டுப் புலங்களையும்
தங்களது சொந்த நிலப்பரப்புக்கள்
என்று கூறினார்கள்

கடும் பனியில் நுழைந்து
பயணம் அமைந்ததுவாய்
பெருந்தூரம் அலைந்தாகிவிட்டது

இன்னும் ஏன் அவை
என் நினைவுச்சுழியில்
உக்கி அழிந்துவிடவில்லை

மரபணுக்களில் அவை
அமர்ந்து இன்னும்
பல்லாயிரம் வருடங்கள்
பயணிக்கும் என்று
எவனோ ஒரு கவிஞன்
கூறும் நாளை எதிர்நோக்கிக்
காத்திருப்பேன்

## எனது மண்ணும் எனது வீடும்

*என்னவர்களிடம் தோற்ற ஒருவனாக*
*எனது வீட்டுக்குச் செல்லும்*
*வாகனத்தை எதிர்நோக்கிக்*
*காத்திருக்கின்றேன்*
*எந்த வாகனங்களும் என்னை*
*ஏற்றிக்கொள்ளவில்லை*

*காலணியற்ற பாதத்தோடு*
*எவ்வளவு காத தூரம்*
*நடந்துவிட்டேன்*

*எத்தனை கனவுகளோடு*
*எனது வீடு நோக்கிய*
*பயணத்தை ஆரம்பித்திருப்பேன்*

*வீட்டு வாசலிலே எனக்காக*
*வேம்புகளும் பூவரசுகளும்*
*இன்னும் காத்தபடி இருக்கின்றன*
*என்ற நம்பிக்கையை*
*என்னால் இழக்க முடிவதில்லை*

*ஆனாலும் எனது வீடு*
*அழிந்து தரை மட்டமாகி*
*மண்மேடாகி இருப்பதாகவும்*
*அதன் மீது பற்றைக் காடுகள்*
*செழித்து வளர்ந்திருப்பதாகவும்*
*சேதிகள் வருகின்றன*

ஆயினும் நான்
அங்கு சென்றடைந்தால்
ஒரு சிறு குடிலையாவது
என்னால் அமைத்துவிட முடியும்

அங்கு எனக்கான வானமும்
நட்சத்திரங்களும் காற்றும்
என்னோடு உரையாடுவதற்காக
எதிர்பார்த்தபடி இருக்கின்றன

எனது முன்னோர்கள்
எரியுண்ட புதையுண்ட
அந்த இடுகாட்டு மண்ணிலே
எஞ்சியிருக்கும் எலும்புத் துண்டுகளில்
ஒன்றையேனும் நான்
மாலையாக அணிந்துகொள்வேன்

ஆலமரத்துக் காளியிடம்
பகிர்ந்துகொள்வதற்காக
நான் பல கதைகளை
என்னுள்ளே வைத்திருக்கின்றேன்

அருகிலே சூலத்தோடு வீற்றிருக்கும்
வைரவர் முன்னே
சுடலைச் சாம்பரைப் பூசி
கலையொன்றை ஆடுவதற்கு
உடுக்கை அடிப்பவர் எங்கே

## கடன்

*சகல மூலைகளிலும் இருந்து*
*தனித்து விடப்பட்டபோதும்*
*தாக்குவதற்கான படையணிகள்*
*இல்லாதபோதும்*
*கண்ணுக்குப் புலப்படாத*
*பிரதேசங்களிலிருந்து*
*கொடூரமான அம்புகள்*
*ஏவப்படுகின்றன*

*பெரும்பாலானவை*
*எனது மூளைப்பகுதியையே*
*குறி வைப்பதாக*
*இருக்கின்றன*

*வறுமை எவ்வளவு*
*கொடியதாக இருக்கின்றது*
*நேரகாலத்துக்கு*
*அது கணக்குகளை*
*முடித்துவிட*
*அனுமதிப்பதில்லை*

*அதனால்*
*முகம் குப்புற நான்*
*கவிழ்ந்து கிடக்கிறேன்*
*அதனைக் கண்டு*
*பலர் சிரித்தும்*
*சிலர் அனுதாபப்பட்டும்*

எல்லாவற்றையும்
வென்றுவிடுவதற்கான
வைராக்கியத்தை இழந்து
நடந்துகொண்டிருக்கின்றேன்
நடைப்பிணமாக

மாலைச் சூரியன்
தெறித்து விழுந்து
நிழலாகிப் போகின்றது
என் நிழல் என்னை
விழுங்கி விட்டிருந்தது
பனிக்கும்பியின் உச்சிகள்
தகர்ந்து கொண்டிருந்தன

தோலைக் கிழித்து
நாளங்களின்
இரத்த ஓட்டத்தில் கலக்கும்
நஞ்சு வார்த்தைகள்
குத்திக்கொண்டு நின்றன
அம்பின் கூரிய முனைகள்
உடலைக் குத்திக் கிழித்து
மூடி மறைத்தவாறு

## ஏன் இந்தப் பின்னடைவு?

*நீண்ட நெடுவெளியில்*
*எனது பயணம்*
*சுமைகளும்*
*இழுபட்டபடியே*

*வான்வெளியைக் கிழித்து*
*வெளியே தெறித்தது*
*மின்னற்கீற்று*
*இடிகள் முழங்கி*
*நிலம் அதிர்ந்து*
*பொழிந்தது மழை*

*ஈரமணல் சிலிர்த்து*
*பச்சைப் போர்வையை*
*இழுத்து மூடிய பாவனையில்*

*எல்லோரும்*
*தமக்குள்ளே*
*பேசிக்கொள்கிறார்கள்*
*ஏதோ நடந்துவிட்டதாகவே*
*பேசிக்கொள்கிறார்கள்*

*அவர்கள் பேசும் மொழி*
*எனக்கு மட்டும்*
*புரியவில்லை*

ஆனால்
கேட்டுக்கொண்டிருந்தவர்கள்
எல்லோரும்
விளங்கிக்கொண்டதாகவே
தலையை
அசைக்கிறார்கள்

மொழியைப் புரிதலில்
எனக்கு மட்டும்
ஏன் இந்தப் பின்னடைவு

சூனியத்திலிருந்து
பிறப்பெடுத்தல் என்பது
கணிதச் சமன்பாடுகளைக்
குழப்பத்தில் கொண்டுபோய்
ஆழ்த்திவிடும்

எவ்வாறு
எனது சுயத்தை
நானே அழித்து
அவர்களை
மகிழ்ச்சிப்படுத்துவது?

# ஏதோவெல்லாம் நடக்குமா?

பதின்மூன்று வருடங்கள்
மகள்
தன்னைப் பொத்தி
வைத்திருந்த அறை
இன்று
எனக்கானது
பறவையின் கூட்டில்
விலங்கு
குடி கொண்டதாக

இணை துயிலுக்கு
அப்பாலும்
அடைந்துகொள்ள
இன்னோர் கூடு இருப்பது
எவ்வளவு பாதுகாப்பானது

வருடங்கள்
முப்பத்திமூன்று
கழிந்துவிட்டன
ஆனாலும் முதலிரவுக்குப்
பிள்ளையார் சுழி போடும்
முயற்சி முடிந்தபாடில்லை

தோற்கும்போதெல்லாம்
ஒளிந்துகொள்ள
ஆசுவாசப்படுத்த
காத்திருந்து
அடுத்த இரையைக் கவ்வ
ஆண் மிருகப் பரம்பரை அலகுகள்
காவிச்செல்லும்
தொடர்ச்சியை மீறி
ஏதோவெல்லாம் நடக்குமா
பேசி எழுதிப்
பெரும் போக்குகளை
விட்டுவிட மாட்டோம்

## எப்படி முடிகிறது?

காலையில் காத்திருந்தது
மரணச் சேதி
மதியம் அந்தியேட்டி
இருவரோடும்
நான் பழகியதில்லை

ஆனாலும்
அந்தச் சாவுகள்
என்னோடு சம்மந்தப்படுகின்றன
ஒன்று இலக்கியவாதி
அடுத்தது
நண்பனின் மாமியார்

இவைகளைப்
புறந்தள்ளிக்கொண்டு
என்னால் எம்மால்
வாழ முடிவதில்லை

ஆனால்
இந்த அனைத்தையும்
நினைத்ததையும்விட
வேகமாகக் கடந்து செல்ல
என்னால் எப்படி முடிகிறது

இப்பொழுது
இலக்கியச் சஞ்சிகை வெளியீட்டில்
நின்றுகொண்டிருக்கின்றேன்
அதற்குப் பின்னாலும்
உரையாடவும் உண்ணவும்
குடிக்கவும் சல்லாபிக்கவும்
துயிலவும்
என்று ஏதேதோவெல்லாம்

## அம்மணமானேன்

*உரத்த குரல்கள்*
*தெறித்துத் தெறித்து*
*விழுந்துகொண்டிருக்கின்றன*

*நண்பனைப் பேச விடாது*
*தன்னை நிலைநாட்டும்*
*சொற்குவியல்கள்*
*இயற்கையை*
*மாசுபடுத்துகின்றன*

*மௌனமாகச் செவிமடுப்பவன்*
*தன்னை*
*நிராகரித்துக்கொண்டிருப்பதை*
*உணராமல்*
*கரகாட்டம் தொடர்ந்தபடி*

*தோற்றுப்போன*
*சுலோகன்களை*
*அவ்வப்போது*
*அள்ளித் தெளித்து*
*சபையைத்*
*திணறடித்துவிட்டதான*
*உள்ளகக் குதூகலம்*

ஒன்றாக வாசம் புரிந்து
ஒரே சித்தாந்தக் கோப்பையில்
உண்டவனைக்
கழு மரத்தில் ஏற்ற
வாய்ப்புகளைத் தேடும்
'பொலிற் பீரோ' கலாச்சாரம்

கவிஞனது கழுத்தும்
அறுக்கப்படலாம்
அதற்கான ஏது நிலைகளைத்
தேடியபடி
பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப்
போர்வையில் முகத்தை ஒளித்தபடி

நண்பர்கள்
பல்வேறு வர்ணங்களில்
ஆடைகளை
அணிந்திருந்தார்கள்

நான் ஆடைகள்
அனைத்தையும்
அவிழ்த்தெறிந்து
அம்மணமானேன்

## அழித்திட வேண்டாம்

நண்பன் தொலைபேசியில்
சொன்ன அந்த வார்த்தைகள்
என்னை இடை மறித்தது

வளைந்தோடிய
அந்தச் சாலையில்
நெளித்தபடி
அழுக்காடை அணிந்திருந்த
அந்தப் பெண்
நான் பசியாயிருக்கிறேன்
என்று எழுதிய
பதாகையைப் பிடித்தபடி
நின்றிருந்தாள்

சாலையோரங்களின்
உள் திருப்பங்கள்
வழியே
இவ்வாறான பல
மனிதர்களை
நான் பார்த்தபடி

என்றுமே சில்லறைகளை
இவர்களுக்கு
உவந்தளிக்க
என் மனம் ஏவியதில்லை

*ஊர்க் கோவில்களிலே*
*பேரூந்துத் தரிப்பிடங்களிலே*
*திரையரங்க வளாகங்களிலே*
*எமது பிச்சையாளர்கள்*
*கைகளை ஏந்துகையில்*
*கசிந்த மனம்*
*இங்கு இது ஏதோ*
*பசப்பு என்று முடிவெடுக்கிறது*

*தனியொரு மனிதனுக்கு*
*உணவில்லையெனில்*
*இந்த ஜெகத்தினை*
*அழித்திட வேண்டாம்*
*என நினைத்துக்கொள்ளுகிறேன்*

## தூரப் போய்விட்டார்கள்

இரண்டு மணித்தியாலங்கள்
மட்டுமே படுத்தெழுந்த
என்னால் எப்படி இவ்வளவு
உற்சாகமாக
கோப்பிக் கடையில்
உட்கார்ந்து கொண்டு
வேடிக்கை பார்க்க முடிகிறது

ஊர்க்காரர் சிலர்
கண்ணில் எதிர்ப்பட்டு
சுகம் விசாரிக்கிறார்கள்

வாரி ஒழுங்காக
இழுத்துப் பின்னப்பட்ட
பெண் ஒருவரின் கூந்தலழகு
என் கவனத்தை ஈர்க்கிறது

பல்வேறு வகை மனிதர்கள்
தாழ்ந்த குரலில் தங்களுக்குள்
பேசியபடி இருக்கைகளில்

பாதங்கள் வழியாக
குத்தும் குளிர்
இறுகப் போர்த்திப்
பூட்டியிருந்த உடைகள்
அளித்த கணகணப்பின்
சமநிலையைக் குழப்புகிறது

எட்டு மணித்தியாலங்கள்
தூங்காவிட்டால்
தன்னால்
சுலபமாக இயங்க முடியாது
என்று எனது வீட்டின்

நிலக்கீழ் வதிவிடத்தில்
வசிக்கும் வெள்ளை
அடிக்கடி எனக்குச்
சொல்லிக் கொள்வான்

நாங்கள் காலை வேளைகளில்
போடும் சத்தங்களால்
தனது நித்திரை கெடுகிறது
எனச் சிலவேளைகளில்
அவன் கோபமாக முறையிடுவதை
இந்தக் கணத்தில்
நினைத்துப் பார்க்கிறேன்

ஆனால் எனது நித்திரை
குலைக்கப்படுவது குறித்து
யாரையும்
நான் குற்றம் சொல்வது கிடையாது

வாடகை தரும்
அவனுக்குள்ள உரிமை
எனக்கு மறுக்கப்படுவதாக
நான் சொல்லிக்கொள்ள முடியாது

ஆனால் நீண்ட காலமாகத்
தேவையான நித்திரையைப்
பெறுவதில்
எனக்குச் சிக்கல்கள்
இருந்துகொண்டே வந்திருக்கின்றது

எனது தாய்
என்னை விட்டுத் தூரப்
போன பொழுது
நான் நித்திரையை
இழக்க ஆரம்பித்திருக்கின்றேன் போலும்
இப்பொழுது மூன்று பிள்ளைகள்
தூரப் போய்விட்டார்கள்

## சாரதியென...

*நட்பு விடுத்த அழைப்பு*
*அதீத விருந்துக்காய்*
*ஆடுகளம் அமைத்தது*

*நாவில் நனைந்து*
*ருசித்தோடிய மது*
*நாடி நரம்பில்*
*புத்துணர்வு பாய்ச்சியது*

*காற்றலையில்*
*மிதந்த இசைப்பாடல்*
*என்னுடலை அசைத்து*
*ஆடலுக்காய் ஆராதித்தது*

*பேச்சும் குடிப்பும்*
*ஆட்டமுமாய்*
*எப்படி நேரம்*
*கழிந்ததுவோ.....*

*இடையே எல்லாம்*
*சிறிது தணிந்த*
*ஓர் கணம்*
*உணர்ந்தேன்*
*நான் விருந்தாளியைக்*
*கூட்டி வந்த சாரதியென*

*என் மனைவி*
*இதனால்தான்*
*சொல்வாளோ*
*கெடுகுடி*
*சொற்கேளாது என*

## ஆனந்தக் கூத்தாடுவீர்கள்

*கவிதை என்று ஒன்றை*
*எழுதத் திட்டமிடுகிறேன்*
*அது பிரசுரமாகும் பட்சத்தில்*
*உங்களில் யாரேனும்*
*அது எனக்கானது*
*என்று உரிமை கோரக்கூடும்*

*அவதூறுப் போர்வையை அணிந்து*
*தன்னை அடித்துத் தாக்கியுள்ளதாக*
*குற்றப் பட்டியலை வாசிக்கக் கூடும்*

*வாசிப்புக்கு அப்பால்*
*வாசக மனதுக்கு*
*மூளைச்சலவை செய்யப்படும்*
*மயிர்த்துளைக்குழாய் வழியாக*
*மருந்து ஊட்டப்படும்*
*கருத்தரித்த மனுப் பூதம்*
*கையெழுத்து வேட்டை ஆடும்*

*பாதிப்பு இருப்பின்*
*மனவருத்தத்தையும் மன்னிப்பையும்*
*உளப்பூர்வமாக நல்குவேன்*

*ஆனால் அவை எவையுமே*
*ஏற்கப்படாது*
*நிராகரிக்கப்படும்*
*தூக்கியெறிந்து வீசப்படும்*
*கால்களால் மிதிக்கப்படும்*

இன்னும் கூடவே
பகிரங்கத்தில்
பல பேர் முன்னிலையில்
என்னைக் கல்லால்
எறிந்து கொல்வீர்கள்
சிந்தும் எனது குருதியை
உங்கள் உடலெங்கும் பூசி
ஆடிப்பாடி ஆனந்தக் கூத்தாடுவீர்கள் !

## முற்றுப் பெறாதவையாய்

எழுந்து நடக்கும் என்னிருப்பைத்
தக்க வைத்தது என் மொழி என்பாய்
அந்த மொழியின் கழுத்தைத் திருகி
மூச்சுக்குழல் வாய் இறங்கி
அகத்தைப் புறத்தே
உருக்கி வார்ப்பதற்காய்
எழுதுவேன் ஒரு கவிதை

தொன்மங்களின் சுகானுபவம்
வாதைகளாய் மாற்றம் பெறும்
நவீனத்துவ முகம்
உன்னுடையதென்பாய்

மரபுகள் வழியாக
உன் முன்னோர்
வஞ்சிக்கப்பட்டதாய்
சரிதங்கள் விரிக்கின்றாய்

பழமையைக் கொளுத்தும்
நெருப்பின் நதிமூலத்தைத்
தேடியலைவதாக
சீற்றம் கொள்கிறாய்

பாறையின் ஆழத்திலிருந்து
மயிர்துளைக் குழாய்
வழியே எழுகின்றது
ஒரு துளி நீர்
வெப்பக் காட்டின் உக்கிரம்
அதைத் துடைத்தழிக்கின்றது

அழித்தலிலும் முற்றுப் பெறாதவையாய்
அவை இயக்கமாய் இயங்குதலாய்
இன்னோர் வடிவம் நோக்கி

எனவேதான் இரத்தம் சிந்தாத
போர்க்களங்களை நோக்கி
என் மனம் அவாவுகின்றது
ஆனாலும் மனிதர்கள்
இரத்தம் சிந்தும்
போர்க்களங்களையே விரும்புகிறார்கள்

## தூங்கும் தாயே நீ நன்றாக உறங்கு

*ஆறு வற்றிக் கிடக்கிறது*
*சூரியன் தன் ஒளியை இழந்தான்*
*காற்று வீசவில்லை*
*வானம் உறைந்து கிடக்கிறது*
*எங்கள் தோட்டத்தில்*
*இருந்த மலர்கள்*
*யாவும் ஏன் வண்ணங்களை இழந்தன ?*

*வானில்*
*சிட்டுக்குருவியாய் நீ பறந்து*
*கொண்டிருக்கின்றாய்*
*இறகுகளை*
*இருப்பவர்களுக்குத்*
*தானமாக வழங்கிவிட்டுப்*
*பறந்து செல்லும்*
*வல்லமை வாய்த்த வரலாறு நீ !*

*அந்த இறகுகளில்*
*நூல் பிரித்து*
*துணி நெய்து*
*எங்களைப் போர்த்திக் கொள்ளுகிறோம் !*

*உனது சொற்களை ஆரத்தழுவி எங்கள்*
*பாவங்களைக் கழுவிக்கொள்ளுகிறோம் !*
*உனது விழி வீச்சின் அலைவரிசையில்*
*கட்டுண்ட காதை பாடுகின்றோம் !*

உனது உடல் மொழியின் அர்த்த பரிமாணங்களை
கற்றுக்கொள்ளுகிறோம் !

நீ வாழ்ந்த வீடு
நீ உறங்கிய கட்டில்
நீ இறுதியாக கண்களை மூடிய
உன்னவனது மடி
உனைச் சூழ்ந்திருந்த உதிரங்கள்
உனது கவிதை வாழ்வை
சந்ததிதோறும் பாடும்
தூங்கும் தாயே
நீ நன்றாக உறங்கு!

## களைந்தாக வேண்டியுள்ளது

*கடல் அளவு வலி*
*உன்னை வாட்டுகிறது*

*உனது வார்த்தைகள்*
*மாறி அர்த்தம் கொள்ளப்படுகின்றன*

*நீ சாத்தானாகச் சித்தரிக்கப்படுகிறாய்*

*இல்லை என்ற வார்த்தையை*
*மொழிய நீ பிரியப்படுவதில்லை*
*அதனால் பொய்யனாகிவிடுகிறாய்*

*மனச்சாட்சிக்கு மறுமொழி*
*சொல்லிவிட வேண்டுமென்பது*
*உன்னை ஆட்டிப் படைக்கிறது*

*ஆனாலும் இந்த உலகத்து வாழ்வு*
*விவாதத்துக்குரிய*
*சமரசங்களுடனேயே*
*உன்னை அழைத்துச் செல்கிறது*

*நீதி மொழி கவிதையாகி விடுவதில்லை*
*என்பதை உணர்ந்தாலும்*
*எழுதித்தான் பழைய உடையைக்*
*களைந்தாக வேண்டியுள்ளது*

*போர்த்தியது புத்தாடையாக*
*அமையாதபோதும்!*

## எதனையும் இழந்துவிடுவதில்லை

நிதானித்து எழுத
அவகாசம் கிடைத்தும்
அந்தரித்து
அலைக்கழிந்துவிடுகிறேன்

அவதானிப்புகள்
வரிகளில் உடைந்து போனது
அவசரப்பட்டு உருக்குலைவது
என் இயல்புதான்

இதனால் உலகு
எதனையும்
இழந்துவிடுவதில்லை

நான் எனக்குள்
பிரமாண்டமாகி விடுவதால்
வெளியே எதனையும்
பார்க்க
முடியாததாகிவிடுகிறது

## சான்றோன் எனக் கேட்ட..

இன்று எனக்கு
எந்த ஓட்டமும் கிடைக்கவில்லை
எனது தொலைபேசி
மணி ஒலிக்கவுமில்லை
ஓட்டம் கேட்டு
எந்தக் குறுஞ்செய்தியையும்
யாரும்
எனக்கு அனுப்பியிருக்கவில்லை

ஓட்டம் கிடைக்கும் போதெல்லாம்
பயணிக்கும் மனிதர்களோடு
அளவளாவும்
தருணங்கள் தோறும்
எனது மகனின் கதையைச்
சொல்லுகிறேன்

கல்லறைக்குச் சென்று
அவனை வழிபட்ட
ஆத்மார்த்தம்
அதனால் கிடைக்கிறது

பிரிவுத் துயரத்தினால்
நள்ளிரவில்
நான் எழுப்பிய கதறல்கள்
எனக்கு அளித்த விடுதலையை
அந்த உரையாடல்களும்
அளிப்பதாகச் சொன்னால்
யார்தான் நம்புவார்கள் ?

என்னிடம் ஓர் நாள்
நீ
மீண்டும்
உயிர்த்தெழுந்து வருவாய்
என நான்
நம்பிக்கொண்டிருப்பதை
யார்தான் நம்புவார் ?

எங்கும் எதிலும்
உன்னை நான்
காண்பதை
யார்தான் உணர்வார் ?

உன் முகத்திலிருந்து
வழிந்து விழும்
புன்முறுவலை
இறுகப்பற்றியபடி
நான் எழுந்திருக்க
முயன்றிருக்கின்றேன்

உன் நினைவுகளைப் பற்றியபடி
என்னவோ எல்லாம்
செய்ய முயன்றிருக்கின்றேன்

உன்னை எரிக்க மனம் ஒவ்வாது
புதைத்திருக்கின்றேன்
அந்தப் புதைகுழியில்
நடுகல் நாட்டப்பட்டிருக்கிறது

நீ படித்த பாடசாலையில்
நீ வென்ற பதக்கங்களும்
உனது ஞாபகார்த்தமாக
நீ அணிந்த
விளையாட்டுச் சீருடையின்
மாதிரியும்

சட்டக வடிவப் பெட்டியூடு
தொங்குவதை
எவ்வளவு நேரமும்
என்னால் அண்ணாந்து
பார்த்துக் கொண்டிருக்கலாம்

உன்னைப் பறைசாற்றும்
அந்தப் பூங்கா
அது குறித்து மக்கள்
சிலாகிக்கும் வேளைகள்
எனைச் சான்றோன்
எனக் கேட்ட தாய் போல் ஆக்கிற்று

## செயற்பாடுகள்

அறிக்கை விரிந்து கிடக்கிறது
அதன் ஒவ்வொரு சொற்களும்
போவோர் வருவோர்
அனைவரையும்
விழித்துப் பார்க்கிறது
எழுதியவர்கள் அதனை
மறந்து போயிருந்தனர்
ஒப்பம் இட்டோர்
மறுதலை நிலைப்பாட்டுக்கு
வந்திருக்கலாம்

அத்துமீறலுக்கும்
அடக்குமுறைக்கும்
சுரண்டலுக்கும் எதிராக
எவ்வளவு சொல்லாடல்களை
உதிர்த்திருப்போம்

போராளிகளாய்
எழுத்தர்களாய்
உரைஞர்களாய்
விமர்சகர்களாய்
நாடகர்களாய்
மறுத்தோடிகளாய்
எங்களை வரித்துக்கொள்வதில்
எவ்வளவு வாஞ்சையோடிருந்தோம்

வரலாறு குத்துக்கரணம் அடித்து
எமது பிடரியில்
அறைந்து உலுக்குகிறது

ஆனாலும் தொடர்ச்சியான
எமது போராட்டத்தின்
ஒரு படிக்கட்டமாக
“இது” என்று ஓங்கியுரைத்து
மனிதனின் உச்சந்தலையில்
சம்மட்டி அடி போட்டு
குருதி கொப்பளித்துப்
பாய்வதைக்
கண்டு குதூகலிக்கிறது
எம் மனம்

செயற்பாட்டாளர்கள் ...
நீங்கள் அனைவரும்
தேடிக்கொண்டிருக்கிறீர்களா ?
தத்துவம் தெரியாத
சிந்தாந்தம் புரியாத
அந்த எளிய மனிதர்களை
நீங்கள் கண்டுகொள்ளப் போவதில்லை

அவர்கள் வீதிகளிலும்
குடிசைகளிலும்
தோட்டங்களிலும்
வேலைத்தலங்களிலும்
சிறைகளிலும் என்று..
இன்னும் இன்னும்
எல்லா இடங்களிலும்
செயற்பட்டபடி...!

அவர்கள் அறிக்கை எழுதுவதில்லை
தீர்மானம் முன்மொழிவதில்லை
மாநாட்டில் உரைப்பதில்லை

ஆனாலும் அவர்களது
பிணங்கள் கூட
செயற்பாட்டாளர்கள்தாம்!

## எங்கே ஆணிகள்

*ஆணிகளைக் காணவில்லை*
*பலகைகளும்*
*எத்துப்படுகுதில்லை*

*மற்றது சுத்தியல் ...*
*அது கைக்கு*
*எட்டுவதேயில்லை*

*ஆனால் என்னைச்*
*சிலுவையாக்கி*
*யாரையாவது அறைவதற்குப்*
*படாத பாடுபடுகின்றேன்*

*எங்கே ஆணிகள் ?*

*எனக்குக் குறைந்த பட்சம்*
*நான்கு ஆணிகளைத் தருவதாக*
*ஆண்டவன்*
*வாக்களித்திருக்கின்றான்*
*அவனுக்காகக் காத்திருக்கின்றேன்*

## விடுதலைப் பெருவெளியில் கலக்க

நாடு நாடாக இடம் மாறிக்
களைத்து விட்ட எனக்கு
புகுந்த நாடுகளும்
தள்ளியே வைத்த எனக்கு
இன்றைய காலை
ஏதோ செய்தியைச்
சொல்லப் பிரியப்பட்டது

புலர்ந்த காலையில் எறியப்பட்ட
சூரியக்கதிர்களால்
என் உடல் சூடானது

சந்திரனையும்
நட்சத்திரங்களையும்
தொலைத்த அந்த வானம்
சூரியனின்
பேராளுதலுக்கு உட்பட்ட
அந்த வானம்
வாழுதலின் ஆசையை
மேலும் தூண்டுகிறது

பச்சை பச்சையாய்
விரிந்தும் தளிர்த்தும்
பல வர்ணங்களாய்
பூத்தும் குலுங்கியும்
உள்ளாசைத் தீயை
எரித்து நிற்கிறது

வீடு சுற்றம் கலைத்தாலும்
கலைந்தாலும்
இந்தப் பூமியில்
எங்காவது எனக்கோர் வாசல்
திறந்திடுமென்ற
நம்பிக்கை வேர்
பாய்ச்சி நிற்கிறது

எத்தனை
கற்பனைகளைக்
குடித்து வாழ்ந்தோம்
எவ்வாறெல்லாம்
கனவுக்குகைகளில்
மூழ்கி எழுந்தோம்

விடுதலைப்
பெருவெளியில் கலக்க
வீட்டைத் துறக்க
இவ்வளவு விருப்புடையவனா நான்!

## தூய்மைவாதப் போர்வை

*என்னைத்*
*தள்ளி விழுத்திக்கொண்டு*
*ஏதோவொன்றைப்*
*பிடிக்கப் போகிறேன்*
*என்று சத்தமிட்டபடி*
*அவன் ஓடினான்*

*அண்ணாந்து பார்த்தேன்*
*சுட்டெரிக்கும் சூரியன்*
*கண்ணுக்கெட்டிய*
*தூரத்தில்*
*அவனைக் காணவில்லை*
*ஆனால்*
*என்னுடைய மிதத்தல்கள்*
*ஞாபகத்துக்கு வந்தன*

*நானும் நேற்று வரை*
*கிழிப்பதாக*
*ஓடிக்கொண்டிருந்தது*
*வந்தது*

*நண்பர்களானதும்*
*எதிரிகளானதும்*
*காதலர்களானதும்*
*கூட*
*அதற்குள் உள்ளடங்கியிருந்தது*

மொழியினால்
அதன் தீவிரம்
கூடியும் குறைத்தும்
அளக்கப்பட்டது

எத்தனை மொழிகளை
எங்கள் மூதாதையர்கள்
கடந்து வந்தார்கள்
எத்தனை கலப்புகளை
உள்வாங்கிக் கொண்டோம்
அதற்குள் ஏன் இந்தத்
தூய்மைவாதப் போர்வையைப்
போர்த்தப் பிரியப்படுகின்றோம்

## நிறைவேற்ற முடிவதில்லை

*எல்லா வேண்டுதல்களையும்*
*என்னால் நிறைவேற்ற*
*முடிவதில்லை*

*இல்லை ...முடியாது..*
*என்று சொல்லவும்*
*இயலாதிருக்கிறது*

*அப்படிச் செய்து*
*முடித்த காலங்களால்*
*மிதிக்கப்பட்ட*
*வரலாற்றுக் கதைகளும்*
*கூடவே உள்ளன*

*இரவின் வெளிதனில் இருந்து*
*கண்ணாடிச் சாளரத்தின்*
*ஊடாகப்*
*புகுந்து வரும் குளிர்*
*என்னைத்*
*தொடர்ந்து*
*தாக்கியபடி*

*நான் நித்திரை இழந்து*
*தவிக்கின்றேன்*

*நண்பி ஒருத்தி*
*தப்பிப் பிழைக்கும்*
*தந்திர விளையாட்டுக்காரன்*
*நான் என்கிறாள்*

ஏனென்றால்
அவளின் உறவு
குறித்து
நான் ஏதாவது
சொல்லியிருப்பேன்

அடிபடும் மனிதர்
திருப்பித் தாக்கியே
தங்களை
வாழ வைத்துக்கொள்ள
முயல்வர் போலும்

துணையின் மொழி
கடுமையாக மாறும்
வேளைகளில்
மூளையின் நரம்புகள்
அதிருகின்றன

நிதானத்தை இழந்த
அனைவரும்
சொற்களை
ஆயுதங்களாக்கியபடி

என்னால் ஏன் அந்தத்
தொலைபேசி அழைப்புக்குப்
பதில் கூற முடியாமல் போனது

## பொறுத்தலும் காத்தலும்

*இன்னும் ஒரு மணி நேரம்*
*காத்திருக்க*
*வேண்டி வரலாம்*
*அதற்கும் கூடுதலாக*
*இழுபடும்*
*வாய்ப்பும் இருக்கிறது*
*எப்படியாவது சவாரி கிடைத்தால் சரி*
*கிடைக்காவிட்டால் என்ன செய்யலாம் ?*

*கோப்பிக்கடையின்*
*உள் அமர்ந்தபடி*
*இன்னுமொரு தரம் அருந்துவதற்கு*
*எது உகந்தது என*
*மனம் சில்லாடுகிறது*
*மறுபுறம் "ரிம் கொட்டன்" கோப்பி*
*கனக்கக் குடிக்க கூடாது என்ற*
*நண்பனின் புத்திமதி*
*காதில் குத்தி உறைக்கிறது*

*தனிய இருக்கும் பொழுது*
*எது செய்தால் என்ன ?*
*யாருக்குத் தெரியப் போகிறது ?*
*எவ்வளவு விசயங்களை*
*அப்படிச் செய்து*
*முடித்திருப்போம்*

*இரகசியங்களை*
*யாருக்கும் சொல்லக் கூடாது*
*அதுவே பெரும் பூதமாகப்*
*படையணி நடத்திக்*
*குத்திக் குதறிச் சின்னாபின்னமாக்கி*
*சீரழித்து விட்டுவிடும்*

எச்சரிக்கை மணி
அவ்வப்போது அடித்து
அவதானமாக இருக்கும்படி
அறிவுறுத்துகிறது
ஆனாலும் குழப்படிக் குணம்
ஒளிந்தபாடில்லை

இந்தக் காலப் பிள்ளைகள் பலர்
எவ்வளவு நிதானமாக இருக்கிறார்கள்
எங்கடை ஓர்மமும்
உத்வேகமும் போட்டு
உலுப்பி எழுப்ப
ஒரு கை பார்க்க
கிளம்ப வேண்டியிருக்கிறது

கண்ணாடியை ஊடறுத்துப்
பார்க்கின்றேன்
பனிப்பாளங்கள்
மறைந்து விட்டிருந்தன
சூரியன்
கோலோச்சிக் கொண்டிருந்தான்
மரங்கள் தங்கள் போர்வைகளைத்
துறந்து
துயரப்பட்டவைகளாக

இன்னும் நான் காத்திருந்த சவாரி
வந்தபாடில்லை
எத்தனை ஓட்டங்களுங்காக
எவ்வளவு நேரம்
காத்துக் கிடந்திருப்போம்
இந்தப் பொறுத்தலும் காத்தலும்
யாருக்கும் இருக்க முடியாது

## காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது

அவன் வைத்தியசாலைக் கட்டிலில்
படுத்துக் கிடக்கிறான்
எத்தனை கருவிகள்
அவன் மீது பொருத்தப்பட்டிருந்தன
ஒட்டி உலர்ந்து
உலாவிக் கொண்டிருந்த
அந்த உடல்
அங்கு விம்மிப் புடைத்திருந்தது

இரண்டு நாட்கள் கழிந்து
அதே கட்டிலில்
சில நிமிடங்களுக்கு முன்தான்
மூச்சு நின்று போயிருந்தது

பெட்டியில் கிடத்தியாயிற்று
ஊர் சுற்றும் சூழல் உறவுகள் கூடி
ஒப்பாரி வைத்தாயிற்று
கவிதை பாடி வரலாறு உரைத்து
இரங்கற்பா இணைத்தாயிற்று
மலர்கள் தூவியாயிற்று

உடல் தாங்கிய பேழையை
உரிமையாகத் தூக்கிச்சென்று
எரித்ததும்
வெறுமை பற்றிக்கொள்கிறது
ஞாபகங்கள் கவ்விய
கோழிக்குஞ்சாக
நசிபடுகின்றேன்

கைகுலுக்கிக் கட்டியணைத்து
முத்தம் ஈந்து
மயான மண்டபத்தை விட்டு
வெளியேறினால்
ஆற்றுப்படுத்த வழமை போல்
கோப்பிக்கடைகளுக்கே
செல்ல வேண்டியிருக்கிறது

ஆனால் இன்னும்
வார்த்தைகளின் படருகை
என்னைப் பற்றிப்பிடித்து
ஆசுவாசப்படுத்தும்
வேளைகளுக்காகவ
காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது

## தூரப் போய்விட்டார்கள்

*இரண்டு மணித்தியாலங்கள்*
*மட்டுமே படுத்தெழுந்த*
*என்னால் எப்படி இவ்வளவு*
*உற்சாகமாக*
*கோப்பிக்கடையில்*
*உட்கார்ந்து கொண்டு*
*வேடிக்கை பார்க்க முடிகிறது*

*ஊர்க்காரர் சிலர்*
*கண்ணில் எதிர்ப்பட்டு*
*சுகம் விசாரிக்கிறார்கள்*

*வாரி ஒழுங்காக*
*இழுத்துப் பின்னப்பட்ட*
*பெண் ஒருவரின் கூந்தலழகு*
*என் கவனத்தை ஈர்க்கிறது*

*பல்வேறு வகை மனிதர்கள்*
*தாழ்ந்த குரலில் தங்களுக்குள்*
*பேசியபடி இருக்கைகளில்*

*பாதங்கள் வழியாக*
*குத்தும் குளிர்*
*இறுகப் போர்த்திப்*
*பூட்டியிருந்த உடைகள்*
*அளித்த கணகணப்பின்*
*சமநிலையைக் குழப்புகிறது*

*எட்டு மணித்தியாலங்கள்*
*தூங்காவிட்டால்*
*தன்னால்*
*சுலபமாக இயங்க முடியாது*
*என்று எனது வீட்டின்*
*நிலக்கீழ் வதிவிடத்தில்*

வசிக்கும் வெள்ளை
அடிக்கடி எனக்குச்
சொல்லிக்கொள்வான்

நாங்கள் காலை வேளைகளில்
போடும் சத்தங்களால்
தனது நித்திரை கெடுகிறது
எனச் சிலவேளைகளில்
அவன் கோபமாக முறையிடுவதை
இந்தக் கணத்தில்
நினைத்துப் பார்க்கின்றேன்

ஆனால் எனது நித்திரை
குலைக்கப்படுவது குறித்து
யாரையும்
நான் குற்றம் சொல்வது கிடையாது

வாடகை தரும்
அவனுக்குள்ள உரிமை
எனக்கு மறுக்கப்படுவதாக
நான் சொல்லிக்கொள்ள முடியாது

ஆனால் நீண்ட காலமாகத்
தேவையான நித்திரையைப்
பெறுவதில்
எனக்குச் சிக்கல்கள்
இருந்து கொண்டே வந்திருக்கின்றது

எனது தாய்
என்னை விட்டுத் தூரப்
போன பொழுது
நான் தித்திரையை
இழக்க ஆரம்பித்திருக்கின்றேன்
போலும்
இன்று மூன்று பிள்ளைகள்
தூரப் போய்விட்டார்கள்

## தனித்து நிற்கிறேன்

இருட்டினில்
தனித்து நிற்கிறேன்
இவ்வளவு நேரம்
பொறுமையாக
என்னால்
எப்படித் தனித்துத்
தரிக்க முடிகிறது

இன்று ஏரிக்கரைத்
தேவாலயத் திருவிழாவுக்குத்
தன்னை
அழைத்துச் செல்லுமாறு
மனைவி அழைத்தது
நினைவுக்கு வருகிறது
ஆனால் நாலு காசு
சம்பாதிப்பதற்குக்
கிடைத்த வாய்ப்பை
எவ்வாறு தவற விடுவது ?

வண்டியின் கண்ணாடிகளில்
விழும் மழைத்தூறல்கள்
எழுப்பும் சிறிதான ஒலி
கும்மிருட்டின்
அமைதியைக் குலைத்தபடி

விருந்தை முடித்த
சில சோடிகள்
இப்போதுதான்
வெளியேற
ஆரம்பித்துள்ளார்கள் போலும்
கட்டியணைத்தபடி
மதுவின் போதையில்
தள்ளாடியபடி

ஆனாலும் பக்குவமாக
வாகனங்களில் ஏறி
மெதுவாக
ஓட்டிச் செல்லுகிறார்கள்

இந்த நேரத்தில்
யாருடனாவது
தொலைபேசியில்
அரட்டை அடித்தால்
எவ்வளவு நன்றாக இருக்கும் ?

பெருமூச்செறிந்தவாறு
வண்டியின் உள் வானொலியைத்
திருகி விடுகிறேன்
அது வழமை போல
ட்ரம்மின் அரசியலை
அலசுகிறது

படம் ஒன்று
வந்து குதிக்கிறது
பிரியமானவர்களால்
எடுக்கப்பட்டிருக்கலாம்

எரிந்து கொண்டிருக்கும்
வீட்டில்
கூரையைப் பிடுங்குவதற்கான
முயற்சியோ.....

சற்றும் மனம் தளராத
விக்கிரமன்
வேதாளத்தைச் சுமந்தபடி
நடந்து கொண்டிருக்கின்றான்....

## விரிந்த அறை

*விரிந்த அறை*
*பல வர்ணச் சருமங்கள்*
*போர்த்தி*
*இருக்கைகளில்*
*நெரிந்து உளைந்தனர்*

*வாயை*
*மூட மறுத்த உபதேசர்கள்*
*கட்டெறும்பைக் கழுதையாக்கினர்*

*குடித்தலையும்*
*வண்டியில் பறத்தலையும்*
*பிரித்துணர*
*விரித்துரைத்தனர்*

*பெயர்க்க வந்து*
*பெருநாளொன்றின் இடையிலே*
*தொங்கித் துவண்ட*
*அலைந்துழல்வு*

*கட்டுகள் இட்டு*
*கரைந்தேறும் வழியற்று*
*பூட்டினால் இட்டாரே*
*இப்பொய்யுடலை*

*விடுதலைப் பறப்பு இன்றி*
*வேருடல் ஊன்றி*
*எத்தனை ஒளியாண்டுகள்*
*இவ் இடுகாட்டில்*

*மே 17, 2016*

# தோற்றுப் போகிறார்கள்..

*சவாரி கிடைக்கும் என்ற*
*அங்கலாய்ப்பில்*
*வந்து சேர்ந்த எனக்கு*
*ஏன் இவ்வாறு நிகழ்கிறது ?*

*தரிப்பிடம் ஒன்றில்*
*காத்துக் கிடக்கின்றேன்*
*இன்னும் நம்பிக்கையை*
*இழக்காத நான் .....*

*கடிப்பதற்கு வடையும்*
*குடிப்பதற்குத் தேநீரும் இருந்தால்*
*எவ்வளவு நன்றாக இருக்கும் ?*

*ஏற்கனவே வாங்கி வந்த*
*“ரிம் ஹொட்டன்” கோப்பியைக்*
*குடித்தாயிற்று*
*வீட்டிலிருந்து வந்த*
*விசாரணைகளுக்கும்*
*முகம் கொடுத்தாயிற்று*
*கண்ணாடியைப் பதித்து*
*காற்றை உள்வாங்கிப்*
*பெருமூச்சை விட்ட*
*என் கண்களில்*
*நான் எதிர்பார்த்திருந்த ‘ஆள்’*
*இன்னும் வந்தபாடில்லை*

*அப்படியெனில்*
*இனியும்*
*ஏன் காத்திருப்பு ?*
*நம்பிக்கை நூலிழையில்*
*தொங்கிக் கொண்டிருக்கும்*
*என் போன்றவர்கள்*
*அதனால்தான் எளிதாக*
*தோற்றுப் போகிறார்கள்*

*மே 8, 2018*

## கவிஞனாவது பெரும் பேறுதான்

*கவிஞனாவது பெரும் பேறுதான்*
*தவம் புரிந்து கடைந்தெடுத்து*
*கற்களைக் கட்டு*
*இடறி வீழ்ந்து*
*உடைந்து படாமல்*
*படிமங்களை*
*உருக்கி வார்*

*வடிவச் சிக்கலுக்குள்*
*உழன்று*
*வார்த்தைச் சித்தனாய்*
*ஆகி விடாதே*

*உள்ளொளி பெருக்கி*
*உன்மத்தம்*
*கொண்டவனாய்*
*எழு*

*வெட்ட வெட்ட*
*வெளித்தள்ளலாய்*
*வா*

*மரபு நூலிழையை*
*அறுத்தெறிந்து*
*அதிசயம்*
*படைக்கும்*
*போர்க்குணத்தைப்*
*போட்டுடை*
*நீளுகிறது பட்டியல்..*

*17,ஏப்ரல், 2016*

## நாடகத்திற்கான தருணம்

சூரியன் சுட்டெரித்தது
சுவாசச் சிறு குழாய்கள்
பெருத்து
நெஞ்சறை அகன்று
மூச்சு முட்டியது

பிராணவாயு
நிறைந்து வழிகையில்
பூரிப்படைந்த உடல்
விம்மித் தணிகிறது

தண்மைக் காற்றை வலிந்து
உள்ளெடுத்துக்
கடந்த நாட்களாய்
வலித்த நெஞ்சுக்கூடு
திமிரெடுத்து நிமிர்கிறது

பாய்ந்தும் பதுங்கியும்
உனது நாடகத்திற்கான
தருணம் வாய்த்தாயிற்று

## நீயும் நானும்

*விமர்சனம் .... பொய்*
*மறுத்தோடுதல் .... பச்சைப் பொய்*
*திறனாய்வு ... அண்டப் புளுகு*

*எனது கணக்குப்பிள்ளை நீ*
*உனது சமையற்கலை நிபுணன் நான்*
*எனது கவிதைக்கு*
*நீ பொழிப்புரை எழுதுகிறாய்*
*உனது புத்தகத்தை*
*நான் வெளியீடு செய்கின்றேன்*

*எனது நாடகத்தில் நீ நடிக்கின்றாய்*
*நான் வசனம் எழுதுவேன்...இயக்குவேன்*
*எனக்கான நிகழ்வுகளில்*
*உனக்கான வாய்ப்புகளை*
*வழங்கி வருகின்றேன்*

*பேட்டிகளிலும் உரையாடல்களிலும்*
*பிரசுரிக்கப்படுபவைகளிலும்*
*உன்னை நீக்கமற நிறைத்து*
*நிற்க வைக்கின்றேன்*

*எனக்கான விருதுகளையும்*
*பட்டங்களையும்*
*நீ வழங்குகிறாய்*
*நான் உன்னைப் பலவற்றுக்குமாய்*
*பரிந்துரைக்கின்றேன்*

*உன்னைப் பட்டு வேட்டி என்று*
*அன்று பரிகசித்த நான்*
*இன்று அந்தப் பட்டினை அணிந்து*
*அதில் குஞ்சங்கள்*
*இல்லையே என்று அங்கலாய்க்கின்றேன்*

*நீயும் நானும் ஒண்டுக்கை ஒண்டு*
*பிறகு ஒரு மயிரும் புடுங்க ஏலாது!*

*(ஏப்ரல் 2,2015)*

* * *

கவிஞர் முரளிதரன் நீண்டகால சமூக அரசியல் செயற்பாட்டாளர்!
அரசியற் காரணங்களுக்காக இலங்கை உட்படப் பல நாடுகளில் சிறை வைக்கப்பட்டவர்.
எழுத்து , நாடகம் என பல்வேறு துறைகளில் ஆர்வம் கொண்ட இலக்கிய ஆர்வலர்.
கனடாவில் நாளை என்ற தமிழ் ஏட்டினதும், உரையாடல் என்ற கலை இலக்கிய
சஞ்சிகையினதும் ஆசிரியராக இருந்தவர். தற்போது கனடாவின்
ரொறொன்ரோ நகரில் வாழ்கிறார்.



